# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்

CC. 93/2019
PW1
நாள். 12.06.2025
பெயர்: கருப்பையா
த/பெ : முத்தையா
ஊர் : சின்னகுரும்பபட்டி

எதிரி ஆஜர்

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 12th day of June 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**அ.சா.1 ல் திரும்ப அழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**

ஆஜர் எதிரி தான் கோவில் உண்டியலை உடைத்து திருடிய நபர் ஆவார். என்னிடம் காட்டப்படும் **இரும்பு கம்பி மற்றும் கத்தி, இரு சக்கர வாகனம் ஆகியவைகள் தான் சம்பவ இடத்தில் இருந்தது. அது அ.சா.பொ.2 , அ.சா. பொ. 3 மற்றும் அ.சா.பொ. 4 ஆகவும் குறியீடு செய்யபப்டுகிறது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கு சான்று பொருட்களை காவல் நிலையத்தில் நான் தான் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். உடைக்கப்பட்டதாக சொல்லப்படும் உண்டியலை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் ஒப்படைத்த பணம் அந்த உண்டியலில் தான் இருந்தது என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல, அது உண்டியலில் இருந்த காசுகள் தான். அது உண்டியலில் இருநத பணம் இல்லை என்றாலும், நானும், ஊர்க்காரர்களும் எதிரிகளை சிக்க வைப்பதற்காக தாக்கல் செய்த பணம் என்றால் சரியல்ல. திருடு போனதாக சொல்லும் கோவில் ஊரின் மத்தியில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும், கோவிலுக்கும் சுமார் 1 1/2 கி.மீ வரும் என்றால் சரிதான்,

2. எனது ஊரைச் சேர்ந்த மணிசேகர் எனக்குபோன் செய்து தகவல் சொல்லி நான் வந்ததாக தான் புகாரில் குறிப்பிட்டுள்ளேன் எனறால் சரிதான். அவர் படுத்திருந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், கோவிலுக்கும் சுமார் 50 மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். கோவிலை சுற்றியுள்ள 50 மீட்டருக்குள் 20,30 க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளது என்றால் சரிதான். கோவிலுக்க முனபான நின்றிருநததாக சொல்லப்படும் இரு சக்கர வாகனம் எந்த நிலையில் இருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. கோவிலுக்குள் உள் செல்வதற்கு இரும்பு கேட் ஏதும் உள்ளதா என்றால் இல்லை, கர்ப்ப கிரகம் வரை யார் வேண்டுமானாலும், எப்போது

வேண்டுமானாலும் சென்று வரலாம். நான் செல்லும் போது கோவிலில் , மணிசேகர், மணிகண்டன் ஆண்டி, வையாபுரி ஆகியோர்கள் அங்கு இருந்தார்கள்என்றால்சரிதான. அப்போது எதிரியை பிடித்து வைத்திருந்தார்கள் , அப்போது தான் நான் வந்தேன் என்றால் சரிதான்.

3. நான் வந்து பார்க்கும் போது எதிரியின் தலையில் இரத்த காயம் இருந்தது எனறால் சரிதான். அந்த காயம் அங்கிருந்தவர்கள் அடித்ததால் வந்ததா அல்லது எதிரி குதித்ததினால் வந்ததா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் எதிரி எந்த பொருட்களையும திருடவில்லை என்றாலும், இரவு நேரத்தில் வாகனம பழுதடைந்ததால் கோவிலில் வந்த நின்று கொண்டிருந்த எதிரி திருடியதாக பொய்யாக புகார் கொடுத்து , பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.பொ.3 கத்தி போல் மேற்சொன்ன கோவிலில் நிறைய உள்ளது என்றால் சரிதான். அதேபோல் அ.சா.பொ.2 இரும்பு கம்பி போன்று கோவிலில் கட்டுமான வேலைக்காக நிறைய இரும்பு சாமான்கள் இருந்தது என்றால் சரிதான்.

4. போலிசார் காவல் நிலையத்தில் நான் வந்து புகார் கொடுக்கும் போது விசாரித்தனர் , அதன் பின்னிட்டு கோவிலில் வந்து என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரை யார் எழுதியது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். உண்மையிலே புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றாலும், ஊர்க்காரர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.